மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.33/2025</u>

2026 ம் ஆண்டு ஜுலை 15 ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முத்துகுமார் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>15.07.2026 பி.வா.சா.4 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனது சொந்த வீடு குமராண்டி சாவடியில் உள்ளது என்றால் சரிதான். எனக்கு அங்கே விவசாய பூமிகள் உள்ளதா என்றால் உள்ளது. குமராண்டி சாவடி தவிர எனக்கு வேறு எங்கும் சொத்துக்கள் கிடையாது என்று சொன்னால் ஆமாம். எனது சொந்த ஊர் இடைக்காட்டு வலசு என்று நான் சொல்லி உள்ளதை பொறுத்து நான் ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணங்கள் எதுவும் இல்லை.

2. அங்கிருந்த சொத்துக்களை விற்பனை செய்து விட்டு தான் குமராண்டி சாவடி நான் வந்தேன். அந்த சொத்துக்களை எப்போது விற்பனை செய்தேன் என்றால் எனது தகப்பனாரின் தகப்பனார் காலத்திலேயே அங்கிருந்த சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டு விட்டது. அப்போது நான் பிறக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

இடைக்காட்டு வலசில் நாங்கள் விற்பனை செய்த சொத்துக்களின் புல எண்கள் மற்றும் விபரங்கள் ஏதேனும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் செல்லம் கூட்டம் என்ற வகுப்பைச் சார்ந்தவர். கலைச்செல்வியின் தகப்பனாரும் செல்லங் கூட்டத்தைச் சார்ந்தவர் என்றால் சரிதான் நாங்கள் எந்த கோவிலுக்கு செல்பவர் என்றால் பொன் அழகி நாச்சியம்மன் கோவிலுக்கு செல்பவர்கள்.

3. நானும் பிரதிவாதியின் தகப்பனாரும் ஒரே கூட்டத்தைச் சார்ந்தவர்கள் என்பதை வைத்துதான் அவர் எனக்கு பங்காளி உறவு முறை என்று நான் சொல்கிறேன் என்றால் ஆமாம்கலைச்செல்வியின் தாத்தா பெயர் தெரியுமா என்றால் தெரியும் அவர் பெயர் மாரியப்ப கவுண்டர் அவரை நான் பார்த்து உள்ளேனா என்றால் இல்லை. அவர்கள் இடைக்காட்டு வலசிலிருந்து எப்போது குடி பெயர்ந்தார்கள் என்பது எனக்கு நேரில் தெரியாது என்று சொன்னால் சரிதான்.

4. இடைக்காட்டு வலசில் மாரியப்ப கவுண்டர் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்த பூமிகள் பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான் சொல்ல கேள்வி பட்டு உள்ளேன். இடைக்காட்டு வலசில் இருந்து மாரியப்ப கவுண்டர் எங்கு குடிப்பெயர்ந்தார் என்ற விவரங்கள் எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான் சொல்ல கேள்வி பட்டுள்ளேன். அந்த விவரங்கள் எனக்கு யார் சொல்லி தெரியும் என்றால் 2ம் பிரதிவாதி மற்றும் ஊரில் நிறைய பேர் சொல்லி எனக்கு அந்த விவரங்கள் தெரியும்.

5. மேற்படி விபரங்களை நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். இடைக்காட்டு வலசைச் சேர்ந்த ராமசாமி கவுண்டர் மகன் மாரிமுத்து என்பவரை எனக்கு

தெரியுமா என்றால் தெரியும். மேற்படி மாரிமுத்து என்பவரின் தாத்தா சின்னப்ப கவுண்டரும், பிரதிவாதிகளின் தாத்தாவான மாரியப்ப கவுண்டரும் என்ன உறவு முறை என்பது எனக்கு தெரியுமா என்றால் ஒன்றுவிட்ட பங்காளிகள் உறவு முறை உள்ளவர்கள். மேற்படியார்கள் உடன் பிறந்த சகோதரர்களா என்பது எனக்கு தெரியாது என்றால் ஆமாம்.

6. அய்யம்பாளையம் சொத்திற்க்கு பிரதிவாதிகள் வகையறா எப்போது குடிவந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எப்போது எந்த வருடத்தில் வந்தார்கள் என்பது எனக்கு தெரியாது. பழனிச்சாமி கவுண்டர் அங்கு குடிவந்த விவரம் மட்டும் நான் சொல்லி கேள்வி பட்டுள்ளேன். பழனிச்சாமி கவுண்டரின் உடன்பிறந்த சகோதரர் பெயர் சுப்புராயன். பழனிச்சாமி கவுண்டரும் அவரது சகோதரரான சுப்புராயன் என்பவரும் தாவா சொத்தில் ஒன்றாக குடியிருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் அவர்கள் ஒன்றாக குடியிருக்க வில்லை சுப்புராயன் நல்லம்மாள் சொத்தில் தான் குடியிருந்து வந்தார்.

7. நான் பிறப்பதற்கு முன்பே மாரியப்ப கவுண்டர் தனது இரண்டு மகன்களையும் அழைத்து வந்து அய்யம்பாளையத்தில் உள்ள தாவா சொத்தில் குடியிருந்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. அய்யம்பாளையம் சொத்தை சுப்புராய கவுண்டரும் பழனிசாமி கவுண்டரும் எவ்வாறு பிரித்துக் கொண்டார்கள் என்றால் அவர்கள் பிரித்துக் கொள்ளவில்லை சுப்புராய கவுண்டர் அவரது மனைவியின் சொத்தான நல்லம்மாள் சொத்தில் தான் குடியிருந்தார் சுப்புராய கவுண்டர் அவரது மனைவி சொத்தில் தான் குடியிருந்து வந்தார் என்பதற்கான நான் என்ன ஆவணங்களை பார்த்து உள்ளேன்

என்றால் அதை சொல்லி நான் கேள்வி பட்டு உள்ளேன். யார் சொல்லி நான் அதைக் கேள்விப்பட்டேன் என்றால் அதை சுப்ராய கவுண்டரின் மனைவியே என்னிடம் சொன்னார்.

8. சுப்புராய கவுண்டருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் ஒரே ஒரு மகள் தான். அவரது பெயர் சுமதி. சுமதி எந்த ஊரில் திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. அவர் நால் ரோட்டில் வசித்து வருவது மட்டும் எனக்கு தெரியும். நல்லம்மாள் இடத்தை தற்போது யார் கிரயம் வாங்கியுள்ளார்கள் என்றால் கிரையம் யாரோ வாங்கியுள்ளார்கள் அந்த விவரங்களை எனக்கு தெரியவில்லை. எந்த வருடம் கிரயம் கொடுத்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது.

9. மாரியப்ப கவுண்டர் இடைக்காட்டு வலசில் இருந்து எட்டிமடைக்கு சென்ற விபரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் 2ம் பிரதிவாதி சொல்லி எனக்கு தெரியும். அந்த விபரங்கள் எனக்கு இரண்டாம் பிரதிவாதி சொல்லி தான் தெரியும் என்பதை பொறுத்து நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன்.

10. நான் அவ்வாறு குறிப்பிட்ட எதுவும் சொல்லவில்லை என்றும் கலைச்செல்வி சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் நான் அவ்வாறு சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது முதல் விசாரணை நிரூபன வாக்குமூலத்தில் பாகபாத்திய விடுதலை பத்திரம் என்று நான் சொல்லியுள்ள சங்கதிகளை பொறுத்து எனக்கு தெரியுமா என்றால் 2004 ஆம் ஆண்டு 14,000/- ரூபாய்க்கு 1ம் பிரதிவாதி கலைச்செல்விக்கு, 2ம் பிரதிவாதி கிரயம் செய்து கொடுத்தது எனக்கு

தெரியும். அந்த ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் ஏதேனும் செய்துள்ளேனா என்றால் இல்லை.

11. பாகப்பாத்திய விடுதலை பத்திரம் சம்பந்தப்பட்ட விபரங்கள் எனக்கு கலைச்செல்வி சொல்லி தான் தெரியுமா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி ரவி தான் சொன்னார். 2ம் பிரதிவாதி என்னிடம் எந்த விபரத்தையும் சொல்லவில்லை என்றும், நான் வழக்கிற்காக அனைத்து விபரங்களையும் 2ம் பிரதிவாதி எனக்கு சொன்னதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

12. 1ம் பிரதிவாதி எனக்கு நெருங்கிய உறவினர் என்றும், எனவே நான் அவர்கள் சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் பொய்யாக இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் இடைக்காட்டு வலசு கிராமத்தைச் சார்ந்தவரே இல்லை என்றும், பிரதிவாதிகள் குடும்பத்திற்கும் எனக்கும் உறவு முறையில் பங்காளி சொந்தம் கிடையாது என்றும், ஒரே கூட்டம் என்ற அடிப்படையில் தான் சொந்தம் என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.07.15 18:30:43 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்